Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.357/2023 Date: 18.06.2024
Deposition of witness for prosecution: PW1( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. நித்யா | Caste | |
| Husband Name | பாண்டியன் | Calling | கூலி |
| Village | கம்பம் | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 29 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 18.06.2024 TIME 4.54 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

1) எதிரியை தெரியும். எனது காம்பவுன்டில் குடியிருந்த நபர் ஆவார். கடந்த 2018ம் வருடம் கம்பம், உதய நகரில் உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருந்தோம். எதிரி குடும்பத்தினரும் அங்கு குடியிருந்தார்கள். நான் வெளியில் எங்கு சென்றாலும் அடிக்கடி என்னுடன் வருவது, இரட்டை அர்த்தத்தில் பேசுவது போன்ற செயல்களில் எதிரி செய்து வந்தார். இது குறித்து எதிரி பெற்றோரிடமும் சொல்லியும், எதிரி கேட்கவில்லை. பின்னர் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் 2018ம் வருடத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் விசாரணை செய்து, எதிரியிடம் மன்னிப்பு எழுதி வாங்கி கண்டித்து விட்டார்கள். அதன் பின்னர் எதிரியின் குடும்பத்தார்கள் வேறு வீடு மாறி சென்றார்கள். சிறிது நாட்கள் கழித்து மீண்டும் எதிரி நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் வந்து, நிற்பார். நான் பல முறை இங்கு எதற்காக வந்து, நிற்கிறாய் என சொல்லியும் அவர் நான் பொது இடத்தில் நிற்கிறேன் உங்களுக்கு என்ன என்று கூறினார்.

2) கடந்த 12.12.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும், எனது கணவர் பாண்டியனும் பைக்கில் கேரளாவிற்கு வேலைக்கு சென்றுவிட்டு வரும் போது, கம்பம் மெட்டு ரோட்டில், புது பைபாஸ் ரோட்டில் குட்டி டீ கடைக்கு அருகே மெதுவாக சென்ற போது எதிரி என்னை வழி மறைத்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசி நில்லுடி என்று கூறினார். எனது கணவருக்கும் எதிரிக்கும் வாய் தகராறு நடந்தது. எனது அக்கா வனிதா ஆடு மேய்த்துக்கொண்டிருந்தவர் சத்தம் கேட்டு வந்து, அவரையும் எதிரி தலையை பிடித்து அடித்துவிட்டார். பின்னர் அருகில் இருந்த டீ கடைக்காரர் விலக்கிவிட்டார்கள். மேலும் எதிரி மீண்டும் சிறிது தூரம் சென்றவர் கண்ணாடீ பாட்டிலை எடுத்து என்னை குத்த வந்தார். அருகில் இருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள். அதன் பின்னர் என்னைக்கு இருந்தாலும் உன்னை குத்தாமல் விடமாட்டேன் என்று கூறினார். நாங்கள் பயந்து கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது அக்காவிற்கு கையில் காயம் ஏற்பட்டது.

நாங்கள் மறுநாள் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

3) எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/ திரு. A. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.357/2023 Date: 18.06.2024
Deposition of witness for prosecution: PW2( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு, பாண்டியன் | Caste | |
| FAther Name | குருசாமி | Calling | கூலி |
| Village | கம்பம் | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 18.06.2024 TIME 05.05 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

1) அ.சா1 எனது மனைவி ஆவார். எதிரியை தெரியும். எனது காம்பவுன்டில் குடியிருந்த நபர் ஆவார். கடந்த 2018ம் வருடம் கம்பம், உதய நகரில் உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருந்தோம். எதிரி குடும்பத்தினரும் அங்கு குடியிருந்தார்கள். எனது மனைவியை பல முறை எதிரி கேலி, கிண்டல் செய்து வந்தார். இது குறித்து எதிரி பெற்றோரிடமும் சொல்லியும், எதிரி கேட்கவில்லை. பின்னர் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் 2018ம் வருடத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் விசாரணை செய்து, எதிரியிடம் மன்னிப்பு எழுதி வாங்கி கண்டித்து விட்டார்கள்.

2) கடந்த 12.12.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும், பைக்கில் கேரளாவிற்கு வேலைக்கு சென்றுவிட்டு வரும் போது, கம்பம் மெட்டு ரோட்டில், புது பைபாஸ் ரோட்டில் குட்டி டீ கடைக்கு அருகே என் மனைவி மற்றும் எனது கொழுந்தியா ஆடு மெய்த்துக் கொண்டிருந்த போது, எதிரி என் மனைவியை வழி மறைத்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசி நில்லுடி என்று கூறினார். நான் மற்றும் எனது கொழுந்தியா வனிதா ஆகியோர் கேட்ட போது, என் கொழுந்தியாவை எதிரி தலையை பிடித்து அடித்துவிட்டார். அருகில் இருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள். அதன் பின்னர்
நாங்கள் மறுநாள் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என் மனைவி கொடுத்தது தான். அதில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.த.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

3) எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/ திரு. A. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.